# சாதிமதபேதமற்ற தமிழீழத்தை உருவாக்குவோம்

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 | வைகாசி 24 | துல்ஹஃதா 23 | இதழ் 116

யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 7-06-1991


(நமது நிருபர் தேவா)

''சாதிமத பேதமற்ற தமிழ் ஈழத்தை உருவாககுவோம்.'' என்று மானிபபாயில நடைபெற்ற முத்தமிழ் விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்

அவர் தமது தலைமையுரையில் மேலும் பேசியதாவது;-

இந்த முத்தமிழ்விழா தலைவர் பிரபாகரனினதும், பொதுமக்களினதும் ஆசையின்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சுட்டு ஐவர் மரணம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உப்பாறுபகுதியில் நிலைகொண்டுள்ளஇராணுவத்தினர்கிரான் தறி என்னுமிடத்தில் படகில் சென்றோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று தமிழ்ப்பொதுமக்கள் ஸ்தலத்தில் பலியானார்கள்.

சாமித்தம்பி இளையராசா

[4ம் பக்கம் பார்க்க]

## 75 ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட பின் இதுவரை தமிழகத்தில் 47 இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தமிழகத்தில் முகாம்களிலும். வெளியேயும் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்துள்ள

# சர்வதேசமன்னிப்பு சபையினர்

# வடக்கு-கிழக்கு செல்லத்தடை!

(கொழும்பு)

**இலங்கை வந்துள்ள 'சர்வதேச மன்னிப்புச்சபை'க் குழு வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு செல்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கையை மன்னிப்புச்சபை வன்மையாக கண்டித்துள்ளது.**

கடந்த 10 வருடங்களின் பின் 'சர்வதேச மன்னிப்புச் சபை' இலங்கைவர அனுமதித்திருந்தது. இதையடுத்து இருவரைக் கொண்ட அரசு இக்குழு கடந்தவாரம் இங்கு வந்தது.

இலங்கையில் கடந்த பலவரு

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-தமிழக அரசுபேச்சு விபரம் வெளியிடவேண்டும்

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கும் முன்னாள் தமிழ்நாடு அரசுக்குமிடையில் கடந்த வருடம் இடம்பெற்ற சந்திப்பு பற்றிய விபரங்கள் வெளியிடப்பட வேண்டுமென முன்னாள் மத்திய அமைச்சர் ப சிதம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## மனிதக் கடலின் நடுவிலே முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாபெரும் முத்தமிழ் விழா மாணிப்பாய் மாவீரர் அரங்கில் நேற்று மாலை 5.50 மணிக்கு தமிழீழ தேசியக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேசியக்கொடியினை அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டதளபதி கருணா ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கினை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகி அவர்களும், யாழ் மாவட்ட துணைத்தளபதிகாஸ்ரோ அவர்களும் ஏற்றிவைத்தனர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலை

(4ம் பக்கம் பார்க்க]

## கலைஞர் கருணாநிதி மீது வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது விடுதலைப் புலிகளுடன் இரகசிய சந்திப்புகளை மேற்கொண்டிருந்ததாக வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

புலிகளுடனான சந்திப்பு பற்றி அரசிடம் ஆவணங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் தாக்குதல்

## படையினர் முஸ்தீபு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் பரவலான முறையில் பாரிய அளவில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்காதெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடும் எனக்கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(4ம் பச்சம் பார்க்க)

## அதிகாரப்பரவலாக்கல் அறிக்கை தயாரிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

சர்வகட்சி மாநாட்டு வரைவுக்குழு இது தொடர்பாக அறிக்கை தயாரிப்பதில் தீவிர

[4ம் பக்கம் பார்க்க]

## ஷெல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவமுகாமிலிருந்து பொன்னாலை அராலித்துறைப் பகுதியை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம்பற்றி தெரியவில்லை. (56)

## இலங்கையின்போக்குகுறித்து இந்திய அரசு திருப்தி

[புதுடில்லி]

வடக்கு-கிழக்குப் பகுதியில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்குறித்து இந்தியா திருப்தி அடைந்துள்ளதாக புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் இலங்கை அரசு மேற்கொள்ளும் என்ன நடவடிக்கை குறித்து இந்தியா திருப்தியடைந்துள்ளது என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)



மானிப்பாயில் நேற்று ஆரம்பமான முத்தமிழ் விழாவின் நுழைவாசலின் முன்தோற்றமும், விழா அரங்கில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான அலங்கார சிகரத்தினையும் படங்களில் காணலாம். (படம்: 'தேவா')

## தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட ஜெயலலிதா அச்சம்

(சென்னை)

ராஜீவ் காந்தி சென்னையில் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் எதிலும் தான் ஈடுபடப்போவதில்லையென அ. இ. அ. தி. மு க. பொதுச்செயலாளர்செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமக்கு ஏற்கனவே கொலை கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவிருந்த பிரச்சார வேலைகள் யாவற்றையும் ரத்து

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**"முள்முடி மன்னர்கள்"**

மீரா வெளியீடு-சமூகநாவல் ஒற்றைக் காகம் விடாமல் கரைந்து கொண்டிருந்தது என்று ஆரம்பித்து "அடக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம் தமிழ் ஈழத்தாயகத்தின் விடுதலைக்காகப் போராடுவோம் என்பதுவரை விறுவிறுப்பாகவே கதையை எழுதியிருக்கிறார். சிதம்பர திருச்செந்திநாதன். விற்பனையாகின்றது, (சி-4808)

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆண்டு இறுதிப் பரீட்சை முடிவுகள் வருமாறு:

முதலாம் வருடம்

முதல் பிரிவு: எஸ். ராஜநடேஸ்வரன், எஸ். சசி, பி கலையரசி, எஸ். சிவகுமாரி, ரி. மயில்வாகனசிங்கம்.

இரண்டாம் பிரிவு; என். குமுதினி, எஸ். சிவராஜி ஏ. மற்றில்டா.

கீழ் இரண்டாம் பிரிவு; ஜி. தவராணி, எஸ். சுபத்திரா.

சாதாரண சித்தி; எஸ். வி. தங்கராசா.

இரண்டாம் வருடம்

முதல் பிரிவு: எஸ். சந்திரபாலன்,

(4-ம் பக்கம் பார்க்க)

5ஆம் ஆண்டு

## நினைவஞ்சலி



**திரு. ஆறுமுகம் செந்தில்நாயகம்**

அன்னைமடியில்: 08-12-1926 ஆண்டவன் அடியில்: 07-06-1986

திதி: 07-06-1991

ஆண்டைந்து சென்றாலும் அகலாத உம்சோகம் மாறாத்துயரமாக மண்மீது நிலைத்ததினால் ஏமாற்றம் அடைந்து நாம் ஏங்கி ஏங்கி அழுகின்றோம் விடியாத இரவாக நிலைத்து விட்ட உம்நினைவு அழியாத கோலமாக விழிமுன்னே தெரிகிறதே. தங்கள் ஆத்ம சாந்தி வேண்டி ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

நினைவு கூரும்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

83/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4818)

## பொது அறிவித்தல்

**யாழ்ப்பாண மாநகர சபை**

**குருநகர் சந்தைக் கடைகளின் குத்தகையாளர்களின் கவனத்திற்கு**

ஒப்பந்தம் புதுப்பிக்காமலும் ஒழுங்காக வாடகை செலுத்தாமலும் வியாபாரம் இதுவரை ஆரம்பிக்காலும் இருக்கும் கடைகள் யாவற்றையும் யாழ். மாநகரசபை மீளக் கேள்வி கோரி குத்தகையில் விடத் தீர்மானித்துள்ளது. இது சார்பாக வாடகை செலுத்த அவகாசம் அளிக்கும் இறுதித் திகதி 30-06-91 ஆகும். இதன் பின்னர் இது தொடர்பான எவ்வித வேண்டுகோள்களும் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03-06-91.

(எ-1358)

## நினைவஞ்சலி



**அமரர் நாகமணி தங்கராஜா**

(கருகம்பன், புலோலி)

மலர்வு: 27-7-1960 உதிர்வு: 10-2-1991

திதி: 24-05-1991

நீங்கள் மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கிவிடவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்:

ஐயா, அம்மா, அக்கா, அண்ணமார்,
தங்கைமார், தம்பிமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

கருகம்பன்
புலோலி.

(எ-1359)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் பிரசோற்பத்தி வருடம் வைகாசித் திங்கள் 27-ம் நாள் (10-06-91) திங்கட்கிழமை பகல் 11-30 — 12-15 வரை அமைந்த சுபமுகூர்த்தவேளையில்: எமது

| திருநிறை செல்வன் **பாலேந்திரன்** அவர்களுக்கும் | திருநிறை செல்வி **யோகராணி** அவர்களுக்கும் |
|---|---|

வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவிலில் நிகழும் திருமண வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. ஐ. மகேந்திரராஜாவும்
பாரியாரும்
(Bank of Ceylon, Point Pedro),
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

திரு. இ. யோககுருவும்,
பாரியாரும்
(Central Bank Rtd, Colombo)
கிழக்குத்தெரு,
வல்வெட்டித்துறை.

(சி-4813)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வைத்திய கலாநிதி

**ஜே. பி. ஸி. பிலிப்ஸ் [ஜே. பி]**

அன்னையின் அரவணைப்பில்: 19-03-1932
ஆண்டவன் அவனியில்: 31 05-1991

வைத்திய துறையிலும் சமூகசேவைத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் அரும்பணியாற்றியவரும், எமது கழக வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவருமாகிய டாக்டர் ஜே. பி. ஸி பிலிப்ஸ் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாரின் ஆன்மா ஆண்டவன் அவனியில் அமைதி அடைய வேண்டுகின்றோம்.

**யுத்கார்மேல் விளையாட்டுக்கழகம்**
**குருநகர்.**

(சி-4821)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருடம் வைகாசி மாதம் 24-ஆம் நாள் (07-06-1991) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-31 மணி முதல் 1-31 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்;

| எமது திருநிறை செல்வன் **கருணாகரன்** அவர்களுக்கும் | எமது திருநிறை செல்வி **சுமதி** அவர்களுக்கும் |
|---|---|

சுவிஸ்லாண்ட் 6814 UATERAGERI யில் திருமாங்கல்ய தாரணம் செய்ய திருவருள் கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அந்நாளில் தாங்கள் மணமக்களை ஆசீர்வதிக்குமுகமாக மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

திரு, திருமதி வ. பசுபதி
தம்பதிகள்,
''கிருபா இல்லம்'',
82/6, 3ம் ஒழுங்கை,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

திரு, திருமதி நா. கனகரட்ணம் (ஐபோம்)
தம்பதிகள்,
''சுபா அகம்'',
காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

(சி 4820)

# இசையும் இலக்கியத்து யானையும்

தொட்டில் தொடங்கி சுடுகாடு வரை மனிதனை இசை தொடர்கிறது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, திருமணப் பருவத்தில் நலங்கு, இறந்ததும் வீட்டில் ஒப்பாரி, சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது பாட்டு என்றெல்லாம் இசை மனிதனைத் தொடர்ந்து செல்கிறது.

எந்த விழாவாக இருந்தாலும், அந்த விழாவில் இசைக்கு ஓர் இடம் எந்த உருவிலாவது அமைந்து வருகிறது.

போர் காலத்தில் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை வீரர்களிடையே களைப்பைப் போக்கவும், களிப்பைப் பெருக்கவும், இசை பயன்படுத்தப்படுகிறது. போர் தொடங்கி விட்டது என்று அறிவித்த முரசின் முழக்கமே ஓர் இசை தான்.

மனிதனின் மனதில் எழும் பல்வேறு வகை உணர்வுகளுக்கேற்ப இசையில் பல்வேறு வகைப் பண்களை அடி நாட்களிலேயே தமிழர்கள் சண்டிருக்கின்றனர். அது மட்டுமா? மாலைப் பொழுதில் செவ்வழிப் பண்ணைப் பாடி மகிழ்ந்தனர். காலைப் பொழுதில் மருதப் பண்ணை பாடி மகிழ்ந்தனர்.

நச்சு உள்ளம் கொண்டவர்களின் நயமொழிபோல் கருத்தை கவரும் படமெடுக்கும் நாகம் இசைக்கு அடங்குவதை அறியாதார் யார்?

தலைக்கு மேல் கதிரவன் தணலைச் சொரியும் வேளையில் மரத்தடியில் அமர்ந்து குழலைத் தன் இதழ்களில் பொருத்தி இசை கிளப்பும் கோபாலன், தன்னைப் பொறுத்தவரையில் சூழ்நிலையில் வெண்ணிலவு வீசச் செய்வது மட்டுமா நடன சுந்தரி போல சலங்கை குலுங்கக் காற்றிலே அசைந்து செல்லும் அந்த இசையால் சிதறிக் கிடக்கும் மாடுகளை மந்தையில் இணைக்கிறான் மந்தையில் இருக்கும் மாடுகளை மகிழ்ச்சியால் அணைக்கிறான்; மாடென்ன காட்டு யானையே இசைக்கு அடங்குகிறது.

பெரிய தினைப்புனம்; உயர்ந்த பரண். சிங்கம்போலும் வலிமையுடைய கானவன் கள்ளுண்டு களித்துக் கிடக்கிறான். அவனுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக அவன் மனைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள்.

பூசிய மயிர்ச்சாந்தினையுடைய பரந்த பெரிய கூந்தலைக் காற்று உலர்த்த அவளும் விரல்களால் கோதிக் கொண்டே பாடுகிறாள்.

அங்கே ஒரு அழகிய காட்சி! ஓர் இளயானை வாய் வைத்த தினைக்கதிரை உண்ணாது நிலையிலிருந்து பெயராது. கண்கள் உறங்கிய நிலையில் நிற்கிறது.

காரணமென்ன? கொடிச்சி பாடிய பாட்டு இளயானையை அந்நிலையில் நிறுத்திவிட்டது! இசையின் திறத்தை இவ்வாறு குறிக்கும் அகநானூற்று அடிகள் இவை.

''உளைமான் துப்பின் ஒங்கு
தினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன்
பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊரல்
இருங்கதுப்
பைதுவரல் அசைவளி
யாற்றக்கை பெயரா
ஒலியல வார்மயிர்
உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில்
குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது
நிலையினும் பெயராது
பாட அப்பைங்கண் பாடு
பெற்றேய் யென
மறம்புகல் பழகளி
றுறங்கும் நாடான்''
(அகம்-102)

— நா. பா. —

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

## முத்தமிழ் விழா

### 2-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: மானிப்பாய், மாவீரர் கலையரங்கம்
நாள்: 07-06-1991 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 5-30 மணி

5-30—6-15 மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. எஸ். சிதம்பரநாதன் | திரு. ஆர். ஜெயராமன் |
| திரு. கே. பாலசந்திரன் | திரு. ஏ. சின்னகணேசன் |

தமிழீழ விடுதலைப்புலிகளின் திறப்புரை
சிறப்புரை: திரு. கலாநிதி இ. பாலசுந்தரம்
தலைவர்: தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்

**வழக்காடு மன்றம்**
பொருள்: தமிழ்ச்சமுதாயத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச்செல்வதற்கு பெரிதும் உறுதுணையாக இருப்பது மரபு பேணலா...? புதுமை போற்றலா...?
நடுவர்: புலவர் ஈழத்துச் சிவானந்தன்

| மரபு பேணல் | புதுமை போற்றல் |
|---|---|
| திரு. ம. சின்னத்தம்பி எம். ஏ. | திரு. பொன். கணேசமூர்த்தி |
| திரு.தி. திருநந்தகுமார் | திரு. குழந்தைவேல் |
| செல்வி பாமா | செல்வி நாமகள் |

**குழுப்பாடல்**
இரு வயலினிசை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
செல்வன் எஸ். கோபிதாஸ் — வயலின்
செல்வன் கே. கண்ணதாசன் — மிருதங்கம்
செல்வன் பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

**நாடகம்:**
கந்தர்மடம் சனசமூக நிலையத்தினர் வழங்கும்
'இரத்தினகிரீடம்'
மரபுவழிக்கூத்து: முல்லைத்தீவு கலை, பண்பாட்டு அவையினரின்
கோவலன் கதை

# வசனநடைகைவந்த வல்லாளர்!

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் தற்கால தமிழ்வசன நடைக்கு ஒருவழிகாட்டியாக திகழ்ந்தார். இவரைத் தமிழ்த் தெய்வத்திற்கு இலங்கைதந்த காணிக்கை என்று சொல்ல வேண்டும். இவர் யாழ்ப்பாணத்துநல்லூரைசேர்ந்தவர் பரிதிமாற் கலைஞன் என்றும் திராவிட சாஸ்திரிஎன்றும் பாராட்டப்பெற்ற திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் நாவலரை வசனநடை கைவந்த வல்லாளர் என்றார்.

பரிதிமாற் கலைஞன் முதலானவர்களைக் காட்டிலும், வசன நடைக்குநல்லதொண்டு செய்தவர் நாவலர் தான். இவர் எழுதிய பெரியபுராண வசனம் இனிமையான தமிழ் வசனநூல்களில் ஒன்று. இவர் சிறுவர்களுக்காகப் பாலபாடமும் எழுதியிருக்கிறார். சுத்தமான லளிதமான செந்தமிழ் நடையில் தமிழுக்கு அன்னியம் இல்லை என்று தாம்கருதிய வடசொற்களையும் பக்குவமாய் கலந்து வீண்சொற்கள், வீண் அடைகள் இல்லாமல் இவர் எழுதியுள்ள வசனம் இன்றும் ஒரு வழிகாட்டி தான்.

இவர் பரிசோதித்தும் புத்துரை எழுதியும் பதிப்பித்த வில்லிபாரதம் முதலிய நூல்கள் இன்னும் பதிப்பாளர்களுக்கு வழிகாட்டிதான். ஏட்டுப் பிரதிகளின் ஆதாரமில்லாமல் இவர் ஒன்றையும் தாமாக திருத்தியதில்லை.

நாவலரே,, டுஒருகாலத்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதையரின் ஆசிரியராகியமகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை. இருவரும் நெருங்கிப் பழகிய துண்டு. நாவலர் காலத்தில் இளைஞராயிருந்தார் வடமொழிக் கலப்பற்ற தனித் தமிழ்க் கட்சியின் பரமாசாரியரான மறைமலையடிகள் என்று சொல்லப்படும் சுவாமி வேதாசலம்.

சென்றநூற்றுண்டின் இறுதியில் ஆங்கிலப் பயிற்சியும் தமிழ் வளர்ச்சிக்கு நல்ல துணையாக அமைந்தது. ஆறுமுக நாவலருக்கே ஆங்கிலமும் தெரியும்.

நல்லைநகர் ஆறுமுக
நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே?

என்று ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை மனமாரப் பாடினார்.

[ஆனந்தவிகடன் 1945]

# 'இந்த மண் எங்கள் சொந்த மண் என்பதை இளந்தலைமுறையினர் உணர்ந்து போராடத் துணிந்துவிட்டார்கள்'

(உடுவில்)

''நாம் இருக்கும் நாடு நமது என்பதை நம்மவர்கள் முற்றுமுழுதாக அறிந்து, உணர்ந்துவிட்டார்கள் எனக் கூறமுடியாதுவிடினும் இளம் தலைமுறையினர் இந்த மண் எங்கள் சொந்த மண் என்பதை உணரத்தொடங்கிவிட்டார்கள். லட்சியத்துடன் அதற்காகப் போராடத் துணிந்துவிட்டார்கள். சகல மக்களும் போகப்போக உணர்ந்துகொள்வார்கள்,''

இவ்வாறு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் மருதனுமடம் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற முத்தமிழ் எழுச்சிவிழாஒட்டிய பட்டிமன்றத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

'நாமிருக்கும் நாடு நமதென்பது அறிந்தோம்' என்று ஈழத்து சிவானந்தன், கம்பன் கழகத் தலைவர் திரு. நந்தகுமார், திரு. ரகுபரன் ஆகியோரும், 'நாமிருக்கும் நாடு நமது என்பது அறியவில்லை' என கவிஞர் சோ. பத்மநாதன், திரு. சிவகுமார் கலைப்பேரரசு ஏ. ரி.பொன்னுத்துரை ஆகியோரும் வாதிட்டனர்.

பட்டிமன்றத்துக்கு நடுநிலைமை வகித்த கம்பன் கழக அமைப்பாளர் திரு ஜெயராஜ் தமது உரையில் மேலும் கூறியதாவது;

நமது தாயும், தந்தையும் பிறந்து, வாழ்ந்து மகிழ்ந்து எம்மைப் பெற்றெடுத்த இடமே நம்நாடு. பெற்றோரை பூசிக்காதவர்களுக்கு, தமிழ் மொழியில் பற்றும் அன்பும் இல்லாதவர்களுக்கு மண்ணில் பற்றுவர நியாயமில்லை. தமிழை நேசிப்பவன்தான் தன் மண்ணை நேசிப்பவன். தமிழ்மொழி எது, பிற மொழி எது என்று பிரித்துணர முடியாதவாறு இன்று பிறமொழிகள் தமிழ் மொழியுள் செறிந்துள்ளன. எனவே

(4ம் பக்கம் பார்க்க)

# "இல்லங்கள், வர்த்தக நிலையங்களை தூய தமிழால் பெயரிட்டு அழைப்போம்"

(உடுவில்)

''எமது பேச்சிலும் எழுத்திலும் தூயதமிழையே பயன்படுத்துவோம் என இவ்

## முத்தமிழ் எழுச்சி விழாவில் 'பேபி'

வெழுச்சி தினத்தில் நாம் எல்லோரும் சபதம் எடுத்துக் கொள்வோம். நாம் வாழும் இல்லங்களுக்கும், எமது வர்த்தக நிறுவனங்களுக்கும் இன்று முதல் தூய தமிழால் பெயரிட்டு அழைப்போம்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகரான திரு. பேபி சுப்பிரமணியம், தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட முத்தமிழ் எழுச்சி விழாவில் சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தலைமையில் உடுவில் கிராம சபை திறந்த வெளியரங்கில் இவ்விழா நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவுத் தலைவர் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி மக்களும் கலைகளும் பற்றி சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது: மக்களின் துடிப்புக்கள், உணர்வுகளில் இருந்து கலைகள் பிரிந்து வளரமாட்டா. எந்தப்போராட்டமும் நடந்ததற்கான உயிர்த்துடிப்புள்ள காட்சிகளையே கலைகள் கொண்டுள்ளன. இலக்கியங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் போன்று முத்தமிழ் கலைகளும் எமக்கு பல சம்பவங்களை விளக்குகின்றன. நிகழ்வுகளை சொல்லும்போது அல்லது கேட்கும்போது நாம் உணர்ச்சிவசப்படுகிறோம். இது கலைகள் மூலம் ஏற்படும் தாக்கமே. கலைகள்வளரவும், பயிலவும் சமாதானமான சூழல் வேண்டுமாயினும் மக்களின் போராட்டங்களையும், தேவைகளையும் கலைகளில் இருந்து ஒதுக்கிவிட முடியாது. தமிழ் மக்களின் கலைகள் போராட்டங்களுடன் இணைந்தே வளர்ந்துள்ளன. இன்றைய காலத்திலும் கலைவிழா எடுப்பது பொருத்தமுடையதே.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில், ''நாமிருக்கும் நாடு நமது நாடு என்று அறிந்தோமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றது.

கலைநிகழ்ச்சிகளாக சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கத்தின் புரட்சிக்கீதங்களும், ''தலைவனைத்தேடி'' என்ற நாட்டியநாடகமும் ''சகுனியர் மூவர்'' என்ற நாடகமும் இடம் பெற்றன.

# தமிழ்ப் பாதுகாப்பு

[புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் பாடல்கள் கற்றோருக்கும் மற்றோருக்கும் இனிப்பவை. சாவா மூவாப் பாடல்கள் அவை,]

பல்லவி

காப்போ மெழுந்திடுவீர் - நம் தாய் மொழியைக்
காப்போ மெழுந்திடுவீர். — காப்போம்.

அனுபல்லவி

தீப் போற் கொதித்தெழுந்து
தியாகம் பலபுரிந்து
மீட்போமென் றாணையிட்டு
வீரத்தமிழர்களே — காப்போம்.

சரணம்

இந்துசமுத்திரத்தின் எல்லையளந்தமொழி
இமயம் வரையும் புகழ் ஈட்டியே வென்றமொழி
சிந்துவெளியில் மங்காச் சிறப்புடனுண்ட மொழி
தெய்வத் தமிழ் மொழி நம் செல்வத்திருமொழியைக்
— காப்போம்.

மன்னர் வளர்த்த மொழி மாநில மாண்ட மொழி
பன்மொழி வாணர்களும் பாவித்துக் காத்தமொழி
உண்ணுமுணவில் நீரில் உயிரி லினியமொழி
கண்ணிற் சிறந்த நம் கன்னித் தமிழ்மொழியைக்
— காப்போம்.

# தமிழகத்தில் ராஜீவுக்கு

## ஆபத்தென சி. பி. ஐ. எச்சரித்திருந்ததாம்

(புதுடில்லி)

ராஜீவ் காந்திக்கு தமிழகத்தில் ஏதாவது ஆபத்து ஏற்படலாமென, மத்திய புலனாய்வுத்துறை (சி பி.ஐ) கடந்த மாதம் 17,ம் 18ம் திகதிகளில் தமிழக அரசுக்கு வானொலிச் செய்தி மூலம் எச்சரித்திருந்ததாம்.

இத்தகவலை முன்னாள் மத்திய அமைச்சர் பி. சிதம்பரம் தெரிவித்துள்ளார். ராஜீவ் கொல்லப்பட்ட பின்னர் தாம் டில்லிக்குச் சென்றபோது, மத்திய புலனாய்வுத்துறையினர் இதுபற்றித் தமக்குத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

**ஒருவர் தங்கியிருப்பார்**

ராஜீவ் கொலை தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தும்பொருட்டு இந்திய மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கொழும்பில் தங்கியுள்ளார். இவர்தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபடுவாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புலிகள் பற்றி...**

இந்தியப் பிரிவினைவாதக் குழுக்களைவிடத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தனித்துவமானவர்கள்; பரந்த அளவில் வெடிமருந்துப் பாவனை, தற்கொலைத் தாக்குதல்கள், பெண் கெரில்லாக்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இந்தியப் பிரிவினைவாதக் குழுக்களைவிட வேறுபட்டவர்கள் எனவும் சி. பி. ஐ. குழு தெரிவித்துள்ளது.

**விஞ்ஞானிகள் ஆராய்வு**

இந்திய விஞ்ஞானிகள் குழு ஒன்று, ராஜீவ் கொலையோடு சம்பந்தப்பட்ட பெண்ணின் உடலைப் பரிசோதனை செய்து வருகின்றது.

இப்பெண் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டறிவதே இவர்களின் நோக்கமாகும். இப்பெண்ணின் உடல் பகுதிகள் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

**ஆபத்தானநிலையில்**

ராஜீவ் கொல்லப்பட்ட குண்டு வெடிப்பில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த திருமதி மரகதம் சந்திரசேகரின் உடல் நிலை கடும் பாதிப்படைந்து மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [சு-பூ]

## இவரைத் தெரியுமா?



[யாழ்ப்பாணம்]

படத்தில் உள்ளவரின் உறவினரோ அல்லது இவரைத் தெரிந்தவர்களோ உங்கள் அருகில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைக் காரியாலயம் ஊடாக கோண்டாவில் மக்கள் முன்னணிக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### பரீட்சை முடிவு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் இரண்டாம் பிரிவு: கே. ஜெயகாந்தராஜா, எவ். ஏ. மரியதாஸ், எஸ். சுகந்தினி.

கீழ் இரண்டாம் பிரிவு; எஸ். சிவானி.

சாதாண சித்தி; கே. ஜெயவதனு, என். சசிகலா.

மூன்றும் வருடம்:

முதல் பிரிவு; ரி. கலாரதி, ஏ. தேவரஞ்சனி, சத்தியநாதன்,

கீழ் இரண்டாம் பிரிவு; கே. நிர்மலாதேவி, வி. கணேஷவேல், எம். கிரிஷாந்தி

சாதாரண சித்தி: கே. சுமந்திரன், எஸ். கௌரி, க.ஜீவானந்தம்.

### இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் வடபகுதியில் நேற்றுமுன்தினம் முதல் ஷெல் தாக்குதலும் விமான தாக்குதலும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சு]

### இலங்கை வந்துள்ள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டங்களாக இடம்பெற்றுவரும் படுகொலைகள், காணாமல் போனோர், காணாமல் போவோர் மற்றும் மிகமோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கை குறித்து இக்குழு விரிவான ஆய்வை மேற்கொள்ளவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இக்குழு வடக்கு-கிழக்கு செல்ல அனுமதி கோரியபோதும் இதனை அரசு நிராகரித்துள்ளதுடன் இவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல முயல்வதனை தடுக்கவும் படையினருக்கு கடும் உத்தரவும் வழங்கியுள்ளது.

அரசின் இந்நடவடிக்கை தமிழ் பகுதிகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதாக உள்ளதென்றும் மன்னிப்புச்சபை வன்மையாக கண்டித்துள்ளது. (சி)

### மனிதக் கடலின்

[1-ம் பக்கத்தொடர்ர்ச்சி]

மையில் விழா ஆரம்பமானது.

பல்லாயிரக்கணக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மனிதக்கடலின் நடுவே, ஒரு பாய்மரக்கப்பல் நின்று கடலில் தத்தளிப்பவர்களை மீட்பது போன்று மாவீரர் அரங்கு காட்சியளித்தது. அதில் நிர்க்கதியாக இருக்கும் தமிழ் மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முத்தமிழ் அமுதம் வழங்கினார்கள்.

அரங்கின்வெளியே வெண்ணிறஆடை அணிந்து இளைஞர்களும், யுவதிகளும் பாதுகாப்பளிக்க மைதானத்தைச் சுற்றி சிவப்பு சேலை அணிந்த மாதர்கள் அணிவகுத்து நிற்க மேடையைச் சுற்றி கறுப்பும் வெள்ளை அணிந்த உடையுடன் யுவதிகள் பாதுகாப்பை வழங்கினார்கள்.

அரங்கின் நடுவே பாரிய வெளிச்சக்கூடு ஒன்றும், அரங்கைச் சுற்றி ஆங்காங்கே மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. (152-56-வி)

### இலங்கையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான தாக்குதல் நீடிப்பதையே இந்தியா விரும்புவதாக எடுத்துக்கொள்ளலாம் என அவதானிகள் கருதுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

### இந்தமண்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழை தமிழாகவே நிலைக்கச் செய்யவே தமிழுக்கு விழா எடுக்கிறோம்.

தினசரி துன்பநிகழ்வுகளைக் கேட்டுச் சலித்துப்போன எம் மக்களுக்கு முத்தமிழ் விழா ஒரு மகிழ்வை தருகிறது. பாரம்பரியமான ஒரு பண்பாட்டைத் தோற்றுவித்த தமிழுக்கு விழா என்றால் அதில் ஒரு தனி உற்சாகம் பிறக்கும்.

தமிழுக்கு விழா எடுப்பதன் மூலம்தான் சமகால நிகழ்வுகளை கண்டு பயந்து வெளிநாடு செல்வோருக்கு இந்த மண்தான் உன் சொந்த மண் என்பதை விளக்கமுடிமுடியும் என்றார்.

### வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவமுகாம் சுற்றாடலில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் மோதல் நடைபெற்றது

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் துஷ்யந்தன் (க.பாஸ்கரன், மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### கலைஞர் கருணாநிதி

(1-ம் பக்கத தொடர்ச்சி)

எதுவும் இல்லாததால் இரகசிய சந்திப்பென்பதை இது உறுதிப்படுத்துவதாகவும் அவர் கூறினார், (சி)

### 75 ஈழத் தமிழர்க

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றிப் பூரண விசாரணைகள் மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது அங்குள்ள இலங்கைத் தமிழர் மீது பெருமளவு கெடுபிடிகளைச் சகல தரப்பினரும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதேவேளை இராமநாதபுரம் மாவட்டத்தில் சென்ற மாதம் 27-ம் திகதிக்கும், இம்மாதம் 3-ம் திகதிக்குமிடையில் 28 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் அகதிமுகாமிலும், வெளியிலும் பதிவு செய்யாமல் தங்கியவர்களே இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். [பூ-சி]

### அதிகாரப் பரவலாக்கல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஈடுபட்டு வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வறிக்கையை இம்மாதம் 25-ம் திகதிக்குமுன் தம்மிடம் கையளிக்குமாறு ஜனதிபதி கேட்டுள்ளார், (க)

### தேர்தல் பிரசார

[1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துவிட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை செல்வி ஜெயலலிதாவின் காரை, நம்பர் தகடுகள் இல்லாத பல கார்கள் பின்தொடர்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [க]

### சாதி மத பேதமற்ற

(1ம் பக்கத் தொட.ச்சி)

நிமித்தமுமே ஆரம்பிக்கப்பட்டது என்றும் கூறினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி பேசுகையில் கூறியதாவது;-

''எமது உயிர்நாடி தமிழ் ஈழம், தமிழ்மக்களின் உயிர் நாடி தமிழ்மொழி. இந்த முத்தமிழ் விழா ஒரு பொழுது போக்கு விழாவாக சருதக் கூடாது எம்முடன் ஒன்றாக வாழ்ந்து உண்டு உறங்கி தமிழீழப் போராட்டத்துக்காகத் தம் உயிரை தியாகம் செய்த 2750 வீரவேங்கைகளுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று உயிர்விட்ட பொதுமக்களுக்குமாகவே இந்தவிழா எடுக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அம்பாறை மட்டுநகர் தளபதி திரு. கருணா பேராசிரியர் கா சிவத்தம்பி யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

வலிகாமம் பொறுப்பாளர் திரு. பகீன் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [வி[

### இராணுவம் சுட்டு

[1-ம் பக்கத் தொட ர்ச்சி

(சங்குவேலி', பெஞ்சமின் செல்வராசா (இருதயபுரம்), அ. விக்கினேஸ்வரன் (ஆவின் சேனை) ஆகியோரே பலியானவர்களாவர்.

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து கடந்த 1ம்திகதியளவில் கந்தப்பு என்பவரும் அவரது மகன் சந்திரமோகன் என்பவரும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (க)

### புலிகள் தமிழக

[1ம் பக்கத் தொடர்ச்சி]

1990-ம் ஆண்டு யூன் 26ம் திகதியும் யூலை 2ம் திகதியும் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியும் மற்றும் முன்னாள் தலைமைச்செயலர், உள்துறைச் செயலர் ஆகியோர் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய விபரங்களை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டுமென்று திரு. ப. சிதம்பரம் தனது கோரிக்கையில் தெரிவித்தார். [பூ]

## காணவில்லை



**செல்வன் ப. சிவகுமார்**

நாகரத்தினம் பவளராசா என்பவருடைய மகன் சிவகுமார் வயது 17. 1-06-91 அன்று வீட்டில் இருந்து வெளியே சென்றவர். பச்சை நிறச்சாரமும், நீலக் கோடன் சேட்டும் அணிந்துள்ளார். இதுவரை வீடு திரும்பிவரவில்லை மேற்படி பெயருள்ளவரை கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

விலாசம்:

நா. பவளராசா

பற்றிமா ரோட், பண்டத்தரிப்பு.

(சி- 4822)

## மரண அறிவித்தல்

### S. K. பாலசுப்பிரமணியம்

(பங்காளர் ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோதர நிறுவனம் யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி பாலாவோடையைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் வசிப்பவரும், பிரபல வர்த்தகருமான S. K. பாலசுப்பிரமணியம் அவர்கள் வியாழக்கிழமை காலையில் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலம்சென்ற சமாதான நீதவான் ஆ. ச. கந்தையா சிதம்பரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலம் சென்ற கதிராசிப்பிள்ளையின் பெருமகனும், காலம் சென்ற இராசநாயகத்தின் அன்புச் சகோதரரும், காலம்சென்ற முகாந்திரம் ஆ. ச. சங்கரப்பிள்ளை, ஆ. ச. ஆறுமுகம் ஆகியோரது அன்புப் பெருமகனும், பொன்மலரின் சிறியதந்தையாரும், ச. ஜெகசோதியின் அன்பு மாமனாரும், நாகம்மாவின் அன்பு மைத்துனரும், C. S. கனகரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட மருகனும், S.S. இராசரத்தினம், S. S. ஞானப்பிரகாசம், S. A. இராசலிங்கம், S. S. செல்வராசா, S. A. பாலேந்திரன், S. S. பாலச்சந்திரன் ஆகியோரது உடன்பிறவா சகோதரரும், க. சிவஞானசுந்தரம் (காலம்சென்றவர்), க. சிவபாதசுந்தரம், க. கனகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கயானனின் அன்புப்பேரனுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9-00 மணிககு நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்: ச. ஆ. பாலேந்திரன்

236/4, இராமையா செட்டியார் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4824)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/108806/81.